**தென் மாகாண சபை – 2020 ஆம் ஆண்டு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென் மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2021 ஆகஸ்ட் 12 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 திசெம்பர் 02 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியொன்று 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் சமர்ப்பிப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக் கூற்றுக்கள் தென் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ள படியான வழியில் உள்ள வருமானம் ரூபா 115,018,220 ஆனதுடன் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக | வழியில் உள்ள வருமானத்திற்காக கணனி மயப்படுத்தப்பட்ட பேரேட்டுக் கணக்கொன்று உரிய விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரின் ஊடாக | வழியில் உள்ள வருமானக் கணக்கொன்று பொதுப் பேரேட்டினுள் சரியாகப் பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த மீதி ரூபா 89,504,271 ஆனமையால் ஆண்டினுள் வழியில் உள்ள வருமானத்திற்கு ரூபா 25,513,949 ஆன சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக பொது பேரேட்டின் வழியில் உள்ள வருமானக் கணக்கின் கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பேணிச் செல்லப்படுகின்றது. | |
| (ஆ) | நிதி நிலைமை தொடர்பான கூற்றின் பிரகாரம் அட்டுறு செலவினம் ரூபா 193,505,412 ஆன போதிலும் இருபத்தைந்து தலைப்புகளுக்குரிய அந்த மீதி ரூபா 239,469,097 ஆனமையினால் ரூபா 45,963,685 ஆன வேறுபாடொன்று நிலவியமையினால் அட்டுறு செலவினம் மற்றும் அண்டிற்குரிய பற்றாக்குறை ரூபா 45,963,685 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அட்டுறு செலவினங்களின் பெறுமதியானது குறித்த நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிதியத்தின் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காணப்படும் அட்டுறு செலவின மீதி மற்றும் நிதியத்தின் கணக்கில் காணப்படும் மீதி ஆகியவற்றை இணக்கம் செய்து நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 07 வணிக முற்பண கணக்குகளின் நிதிக்கூற்றுக்களின் செலுத்த வேண்டிய திரண்ட பெறுமானத் தேய்வாக ரூபா 73,110,507 ஆன பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியத்தின் கணக்கில் அது குறிப்பிடப்பட்டிராமையால் திரண்ட பெறுமானத் தேய்வு கணக்கு அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வின் அவதானிப்பினை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன் கடந்த வருடங்களிலும் வணிக முற்பண கணக்குகளின் வரவு செலவு அறிக்கையின் மீதிகள் மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | வணிக முற்பண கணக்குகளில் காண்பிக்கப்படும் மீதிகளை நிதியத்தின் கணக்குகளுடன் பொருந்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தென்மாகாண சபை நிதிய கணக்கின் குறிப்பு இலக்கம் 18 இன் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த வாகனங்களை பதிவு செய்யும் கட்டணங்கள் மற்றும் வாகன அனுமதிப்பத்திர கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,361,194,437 ஆன போதிலும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 1,343,184,266 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 18,010,171 ஆன வேறுபாடொன்று நிலவியது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுடன் நிதியத்தின் கணக்குகளின் பிரகாரம் வருமானம் மற்றும் தென்மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வருமானம் ஆகியவற்றிற்கு இடையே வேறுபாட்டிற்கு காரணமாக பெறவேண்டிய வருமானங்கள் உள்ளன. பெறவேண்டிய வருமானங்கள் கணக்கு வைக்கப்படுவதில்லை. | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதி மற்றும் நிதியத்தின் கணக்குகளின் மீதி ஆகியவை இணக்கம் செய்யப்பட்டு திருத்தப்பட வேண்டும். |
| (உ) | தவறுதல்களாக பதிவு செய்யப்பட்ட ரூபா 12,189,330 கூட்டுத் தொகையான பணம் நிதிச்செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டுக்கான வருமானம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது வருமானமொன்று அல்ல என்பதுடன் கணக்கினை திருத்தும் பதிவு என்பதால் ஏனைய பெறுவனவுகளின் காண்பிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய வருமானங்கள் மாத்திரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| (ஊ) | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் மீதிக்கு சீராக்கம் செய்யப்படாதிருந்த ரூபா 120,333,153 தொகை பேரேட்டு பதிவு இலக்கம் 88 இன் மூலம் மீளாய்வாண்டின் நிதியக் கணக்கின் நிலையான சொத்துக்களின் மீதிக்கு சீராக்குவதற்கு உரிய தகவல்கள் மற்றும் நிதிச்செயலாற்றல் கூற்றின் | ஆரம்ப மீதிகளின் சீராக்கமொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் இறுதி மீதிகள் மற்றும் மாகாண நிதிய கணக்கின் இறுதி மீதி சரியானதாகும். | பேரேட்டுப் பதிவுகளை இடும்போது அதற்குரிய தகவல்கள் தெளிவாக காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி செலவினங்களாக பதிவளிக்கப்பட்டிருந்த ரூபா 2,816,043,003 ஆன மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்கள், மூலதன சொத்துக்களின் சுவீகரிப்புகளுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்ட எழுதுகருவிகளின் இறுதி இருப்பினுள் விடய இலக்கம் 31302 கொண்ட வணிக முற்பணக் கணக்கிற்கு உரிய இறுதி இருப்புத் தொகையான ரூபா 209,164,862 உள்ளடக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்குரிய ஏனைய வழங்கல்கள் மற்றும் சேவைகளின் செலவினம் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டிற்குரிய பற்றாக்குறையும் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த இருப்பு சீராக்கம் மாத்திரம் இடம்பெற்றுள்ளதுடன் செலவினங்களில் குறைவு அல்லது அதிகரிப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை. | ஆண்டின் இறுதியில் உள்ளபடியான எழுதுகருவிகளின் இறுதி இருப்பு சரியாக கணக்கு வைக்கப்படவேண்டும். |
| (ஏ) | தென்மாகாண வருமானத் திணைக்களத்தின் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் பிரகாரம் திட்டவட்டமான மதிப்பீடு செய்யக்கூடியதாக இருந்த ரூபா 478,344,282 ஆன பெறவேண்டிய (நிலுவை) வருமான மீதிகள் 08 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிதியத்தின் கணக்குகளில் அந்த மீதி அட்டுறு அடிப்படையில் | அனைத்து வருமானங்களும் (வட்டி வருமானம் நீங்கலான) சேகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இனம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுகின்றமையால் பெற வேண்டிய வருமானங்கள் கணக்கு வைக்கப்படுவதில்லை. | மீளாய்வாண்டிற்குரிய உள்ளபடியான வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் நிதியத்தின் கணக்குகளில் கணக்கு வைக்கப்படவேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டு பெறவேண்டிய வருமானமொன்றாக காண்பிக்கப்பட்டிராமையால் ஆண்டிற்கான வருமானம் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | மாகாண சபையின் கீழ் உள்ள 25 தலைப்புகளுக்குரிய ஒவ்வொரு நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் 2020 டிசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 23,917,667,658 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளபடியான மாகாண நிதியக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி ரூபா 42,289,073,491 ஆனமையால் அந்த இரு மீதிகளுக்கிடையே ரூபா 18,371,405,833 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 25 தலைப்புகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்து மூல தகவல்களின் பிரகாரம் நிதியத்தின் கணக்குகளுக்கு தகவல்கள் உள்ளடக்கப்பட்டது. | மாகாண நிதியக் கணக்கு மற்றும் 25 தலைப்புகளின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்குரிய பெறுமதிகள் திருத்தப்பட வேண்டும். |
| (ஒ) | மாகாண சபை நிதியத்தின் கணக்கின் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் தென்மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 166,580,523 மற்றும் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணமான ரூபா 1,049,220,528 குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் நிதியத்தின் கணக்குகளில் நடைமுறை | உள்ளூராட்சி நிறுவனங்களினால் அறிக்கையிடப்பட்டுள்ளது மாகாண வருமான திணைக்களத்தினால் சான்றுபடுத்துவதற்கு முன்னர் உள்ள பெறுமதி ஆகும். அதனால் மாகாண சபை நிதியத்தின் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றிற்கிடையே வேறுபாடுகள் நிலவக்கூடும். | நிதியத்தின் கணக்கில் மீதி மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் உரிய சீராக்கங்களின் மூலம் திருத்தப்படவேண்டும். |

பொறுப்புக்களின் மீதி அதற்கு சமனான பெறுமதியனால் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- வேண்டுமென்றே விட்டுவிடுதல்கள் மமற்றும் உள்ளக கட்டுப்பாட்டிலான கவனயீனங்கள் மோசடிகள் இடம்பெறுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 300 – தென் மாகாண ஆளுநரின் செயலகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்** | | |
| 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 20(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையினால் காலத்திற்குக் காலம் | இது தொடர்பில் நிலவும் பிரச்சனைகளை கலந்துரையாடி எதிர்காலத்தில் | மாகாண அவசர சந்தர்ப்பங்களுக்கான நிதியத்தினை வலுவாக்குவதற்கு |

| | | |
|---|---|---|
| கட்டளைச்சட்டங்களின் மூலம் தீர்மானிக்கப்படும் பணத்தின் அளவானது மாகாண சபை நிதியத்திலிருந்து அவசர சந்தர்ப்பங்களின் போது நிதியத்திற்கு செலுத்த வேண்டும். எவ்வாறான போதிலும் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மாகாணசபை நிதியத்தில் இருந்து வழங்கப்பட்ட தொகை நீங்கலாக வேறு எந்த பணமும் மாகாணசபை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. நிதியத்தின் முதலீட்டிலிருந்து ஈட்டப்படும் நிலையான வைப்பு வட்டி வருமானம் மாத்திரம் நிதியத்தின் ஒரே நிதி உட்பாய்ச்சல் மூலமாக காணப்பட்டது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நடவடிக்கை எடுக்கவேண்டும். |

**1.5.2 தலைப்பு 304 – தென் மாகாண முதல் அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு**

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **எதிர்பார்த்த பெறுபேறுகளைப் (Out Put) பெற்றுக்கொள்ளாமை** | | |
| அமைச்சினால் தென்மாகாணத்தினுள் மலசலகூடவசதிகள் இல்லாதுள்ள 11,246 குடும்ப அலகுகளின் எண்ணிக்கையில் சுமார் 600 குடும்ப அலகுகளுக்கு மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்காக 2019 ஆண்டின் போது 493 குடும்பங்களுக்கு ரூபா 7,888,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மலசலகூடங்களை கட்டி நிறைவு செய்திருந்தது ஒரு நலனாளி | 2019/05/24 ஆம் திகதியே செயற்றிட்டத்திற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. அதன் பிரகாரம் 2019 ஜூன் மாதம் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் கிராமிய மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட ரூபா 28 மில்லியன் தொகையில் 700 நலனாளிகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. நாட்டில் நிலவிய தேர்தல் நிலைமை | செயற்றிட்டத்தை உரிய முறையில் நிறைவேற்றி எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். |

| | | |
|---|---|---|
| மாத்திரம் ஆகும். 2020 ஆம் ஆண்டினுள் கேகாலை, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்காக ரூபா 17,152,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றுள் சுமார் 206 நலனாளிகளுக்கு மாத்திரமே நலன்கள் கிட்டியிருந்ததுடன் மலசலகூடத்தினை 27 நலனாளிகள் மாத்திரமே கட்டி நிறைவு செய்திருந்தனர். அதன் பிரகாரம் செலுத்தப்பட்ட பணத்தில் எதர்பார்த்த பிரதிபலன் அடையப்பட்டிருக்கவில்லை. | காரணமாக தேர்தல் ஆணையாளரின் 2019.09.28 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நிகழ்ச்சித்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டமையால் குறித்த செயன் முன்னேற்றத்தை அடைய முடியாதிருந்தது. | |

### 1.5.2.1 ரூஹுணு சுற்றுலாப் பணியகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) எதிர்பார்த்த பெறுபேறுகளைப் (Out Put) பெற்றுக்கொள்ளாமை** | | |
| றுகுணு சுற்றுலா பணியகத்தின் மதுனாகல செயற்றிட்டத்தின் சுடுநீர் ஊற்று நீரினை பயன்படுத்தி பாதங்களுக்கு இயன்முறை பயிற்சி வழங்குவதற்காக ரூபா 1,979,625 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 30x10 அடிகள் கொண்ட கட்டிடத்தின் நிர்மாணம் நிறைவு செய்யப்பட்டிராததுடன் அத்திவாரம் மற்றும் தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் செயற்றிட்டத்தின் நோக்கம் நிறைவேறியிராததுடன் ரூபா 1,979,625 ஆன செலவினம் விளைவற்றதாகியிருந்தது. | இந்த இடத்தில் காணப்படும் கட்டடத்தின் மாதிரிக்கு பொருந்தும் வகையில் நிர்மாணத்தின் பணிகளை மாற்றியமைத்த காரணத்தால் அந்த ஆண்டிற்கான நிதியேற்பாடு போதுமானதாக இல்லாதிருந்தமையால் நிர்மாணப்பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. 2021/2022 அபிவிருத்தி திட்டத்தில் நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டு இந்த பணி நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துக்கொள்கின்றேன். | செயற்றிட்டத்தை நிறைவு செய்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்<br>----------------------------------------------------<br>றுகுணு சுற்றுலா பணியகத்தினால் மதுனாகல செயற்றிட்டத்தின் கீழ் ரூபா 41,452,679 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை, ஓய்வு அறை மற்றும் உணவு அறை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்ற நிலையில் காணப்பட்டதுடன் சுற்றுலா விடுதிக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 837,000 பெறுமதியான 03 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டன. மேலும் 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 1,306,910 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கமிகடமண்டிய இன் நிர்மாணங்கள் எவையும் இனங்காண முடியாதவாறு அதன் சிதைவுகள் மாத்திரம் எஞ்சியிருந்தது. அவ்வாறே கமிகம்மாண இன் ரூபா 2,718,744 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 04 சுற்றுலா விடுதிகளின் கூரைத்தகடுகள் கழன்று வீடு சிதைவடைந்தவாறு காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் போது அது புனரமைக்கப்பட்டு உள்ளூர் சுற்றுலா பயனிகளின் தேவைப்பாட்டிற்கு பயன்படுத்துவதற்கு சுற்றுலா அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் புனரமைப்பதற்காக அம்பாந்தோட்டை மாவட்ட பொறியியலாளரின் மூலம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சுற்றுலா அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் அதனை சுற்றுலா வசதியொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த சொத்துக்களை உரிய முறையில் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

**1.5.2.2 தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| முகாமைத்துவ செயற்திறனின்மைகள்<br>----------------------------------------<br>தென்மாகாண சுற்றுலா அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் தென்மாகாணத்தின் முயற்சியாளர்களுக்கான ஊக்குவிப்பு அபிவிருத்தி கடன் செயற்திட்டம் (Southern Province Enterprenierships Encouragement | கருத்து முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

Development Loan Project) இன் கீழ் 2020 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிலுவை கடன் பெறுநர்களின் எண்ணிக்கை 282 ஆக காணப்பட்டதுடன் மொத்த நிலுவை கடன் தொகையானது ரூபா 23,371,333 ஆகும். இவற்றுள் 01 வருடங்களை விட அதிகமான 60 நிலுவை கடன் அறவிடப்பட வேண்டிய கடன்தொகை ரூபா 10,305,929 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 தலைப்பு 305 – தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| முகாமைத்துவ செயற்திறனின்மைகள் | | |
| (அ) 2020 மே 28 ஆம் திகதிய அமப/20/0554/213/028 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் இலக்கம்(i)(அ) இற்கு இணங்காத வகையில் அம்பலங்கொடை மாவட்ட மருத்துவமனையின் மாவட்ட மருத்துவ உத்தியோகத்தர் 2020 ஜூன் 25 ஆம் திகதி 60 வயதினை பூர்த்தி செய்த பின்னரும் நிறுவனத்தின் தலைவராக சேவையாற்றியவாறு இருந்தார். | நிறுவனத்தின் தலைவராக மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கு அவரின் சிரேஷ்டத்துவம் மற்றும் இடமாற்றலின் கீழ் வரிசை அமைச்சின் இடமாற்றலின் கீழ் உரிய சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) திணைக்களத்திற்கு சொந்தமான கப் வண்டியொன்று 2019 மார்ச் 29 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி இருந்தது. அந்த விபத்து | இது தொடர்பில் மூவரடங்கிய விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் மற்றும் 2020 மார்ச் 17 ஆம் திகதிய 3 நபர்களை கொண்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த பரிந்துரையானது விபத்து இடம்பெறும் சந்தர்ப்பத்தில் வாகனத்தை ஓட்டிய சாரதி பொறுப்புக் கூற வேண்டியமையால் இடம்பெற்ற நட்டமான ரூபா 284,626 தொகையை அவரிடமிருந்து அறவிடுவதற்கும் அதன் பின்னர் கப் வண்டியினை ஓட்டியமையினால் அதன் எஞ்சினுக்கு ஏற்பட்ட சேதமான ரூபா 254,337 ஆன தொகையை குறித்த சாரதியிடமிருந்தே அறவிடுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2020 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.5.4 தலைப்பு 307 – தென் மாகாண ஆயுர்வேத திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | | |
| (அ) ஆயர்வேத உற்பத்தி முற்பணக் கணக்கின் (விடய இலக்கம் 30702) பெறுவனவுகளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆகக் குறைந்த எல்லை ரூபா | ஆண்டின் இறுதியில் ஒட்டு மொத்த ஆயுர்வேத மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்படும் மருந்துகளின் அளவானது குறைவடைந்தமையால் | எல்லைகளை விஞ்சுவதற்கு முன்னர் உரிய எல்லைகளில் திருத்தங்களை மேற்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| 60,000,000 ஆன போதிலும் பெறுவனவுகளின் உள்ளபடியான பெறுமதி ரூபா 52,412,730 ஆனமையால் பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லைக்கு ரூபா 7,587,270 இனால் அடையப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த வருமானம் குறைவடைந்திருந்ததுடன் வரவு மீதியின் உச்ச எல்லை மீறப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறாதிருக்க பொறுப்புடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது ஆயர்வேத உற்பத்திகளின் முற்பணக் கணக்கின் அதிக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த செலவினத்தின் எல்லையானது ரூபா 161,775 இனால் மீறப்பட்டிருந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. | ஆண்டின் இறுதியில் ஒட்டு மொத்த ஆயுர்வேத மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்படும் மருந்துகளின் அளவானது குறைவடைந்தமையால் எதிர்பார்த்த வருமானம் குறைவடைந்திருந்ததுடன் வரவு மீதியின் உச்ச எல்லை மீறப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறாதிருக்க பொறுப்புடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | வணிக முற்பண கணக்குகளின் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். ஏதேனும் காரணத்தினால் எல்லை மீறப்படல் அவதானிக்கப்பட்டால் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4.1 பெலிஅத்தி மருந்துப்பொருள் உற்பத்திக்கூடம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பெலியத்த மருந்துப் பொருள் உற்பத்தி கூடத்தின் உயிரியல் வாயு அலகினை நிர்மாணிப்பதற்கு தென்மாகணத்தின் பிரதம அமைச்சு மற்றும் ஹல்போ இக்கோ கிறீன் கம்பனி 2013 ஆகஸ்ட் 21 ஆம் திகதி உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தது. தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டதாக சான்றுபடுத்தி 2014 பெப்ரவரி 21 ஆம் திகதி ரூபா 792,000 ஆன கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் | மருந்துப் பொருட்களின் உற்பத்தியின் போது உயிரியல் வாயு கொள்கலன்களின் பயன்பாடு தோல்வியடைந்தமையால் Helpo நிறுவனத்துடன் கலந்துரையாடி அதனை மேம்படுத்துவதற்கு உரிய ஆரம்ப கட்ட பணிகள் இடம்பெறுகின்றன. | உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணங்களை நிறைவேற்றி பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

அது 2015 பெப்ரவரி 21 ஆம் திகதியின் பின்னர் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாதவாறு செயலற்று காணப்பட்டது.

**1.5.5 தலைப்பு 308 – தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணிகள் அபிவிருத்தி, பெருந்தெருக்கள் மற்றும் செய்தி அமைச்சு**

**1.5.5.1 தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள் | | |
| (i) தென் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 65,010,000 பெறுமதியான காணிகள் மற்றும் ரூபா 35,800,000 பெறுமதியான கட்டடங்கள் 1993 ஆம் ஆண்டு முதல் அதிகாரசபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் அந்த பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதக் காரணமாக அதிகாரசபையின் தெறிய சொத்துக்களின் பெறுமதியானது அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமையினால் நிதியத்தின் கணக்குகளின் முதலீட்டுப் பெறுமதியும் அந்த அளவினால் குறைக் கணிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபைக்கு உரித்து இல்லாதிருந்தமையால் பெறுமதிகள் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | உரிய சுவீகரிப்புகளை மேற்கொண்டு சொத்துக்களை மதிப்பிட்டு உரிய பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தென்மாகாண வீதி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த காபற் உற்பத்தி இயந்திரத்தின் பெறுமதியினை இணங்கண்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. உரிமையாளரின் அனுமதியின்றி தனியார் காணியொன்றில் இந்த இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தது. அந்த இயந்திரத்திலிருந்து காபற் உற்பத்தி செய்தல் 2018 ஆகஸ்ட் முதல் 2020 செப்டம்பர் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த காலத்தினுள் காவலாளர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு நீங்கலாக ரூபா 2,645,139 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கையளிக்கப்பட்ட காபற் உற்பத்தி இயந்திரத்தின் பெறுமதியை சரியான முறையில் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிரமம் மற்றும் சுயதொழில்சார் மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை காரணமாக அந்த பெறுமதி கணக்குகளில் எடுக்கமுடியாதிருந்தது. | காபற் உற்பத்தி இயந்திரத்தினை உரிய முறையில் கணக்கு வைத்து அதிகாரசபையின் காணியில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அது உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 74,999,565 கூட்டுத்தொகையான 04 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் ரூபா 276,084,492 கூட்டுத்தொகையான 03 கடன்கொடுத்தோர் மீதிகள் நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படுவதுடன் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகள் உரிய பெறவேண்டிய பிரிவுகளுடன் கலந்துரையாடி துரிதமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | நீண்ட காலமாக நிலவும் கடன்பட்டோர் மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| (iv) | ரூபா 13,135,482 கூட்டுத்தொகையான 04 மீதிகள் பல வருடங்களாக பெறவேண்டிய மீதிகளாக நிதிக்கூற்றுகளில் காணப்படுவதுடன் அவற்றை அறவிடுவதற்கு அல்லது | வெளிவாரி நிறுவனங்களில் இருந்து அறவிடப்படவேண்டிய இந்த மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை | நீண்டகாலமாக முன்கொண்டுவரப்படும் பெறவேண்டிய மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றை அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெரிவித்துக்கொள்கின்றேன். | வேண்டும். |
| (v) | 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் காணப்படும் ரூபா 20,575,082 கூட்டுத்தொகையான கேள்வி வைப்புக்களின் 208 மீதிகள் மற்றும் ரூபா 56,771,198 கூட்டுத்தொகையான பிடிகாசு மீதிகள் 835 ஆகியவற்றை தீர்ப்பதற்கு அல்லது அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் ஒப்பந்தம் மற்றும் வழங்குநர்களுக்கு அறிவிக்குமாறு விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது என்பதும் உரிய முறையில் இந்த மீதிகளை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். | கேள்வி வைப்புக்கள் மற்றும் நிறுத்தி வைத்தல்களை தாமதமின்றி தீர்க்கவேண்டும். |
| (vi) | சம்பளப் பட்டியல் தொழிலாளர்கள் சம்பளத்தில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்ட 3 சதவீதமான தொழிலாளர்களின் நிறுத்தி வைத்தல்கள் தொழிலாளர் சேவையில் ஈடுபட்டு பணி நிறைவடைந்த பின்னரும் மீள செலுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,241,748 கூட்டுத்தொகையான தொழிலாளர் நிறுத்தி வைத்தல்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் அறிக்கையொன்றினைப் பெற்று எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | இந்த மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்<br>------------------------------------------------------ | | |
| (i) | கலகொடையில் அமைந்துள்ள கல்தார பிரிவின் உற்பத்தி நடவடிக்கைகள் 2018 ஜூலை 09 ஆம் திகதி முழுமையாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் காபற் உற்பத்தி இயந்திரம் 2020 செப்டெம்பர் 09 கணக்காய்வுத் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது இற்றுப் போனவாறு காணப்பட்டது. இந்த தார் உற்பத்தி நிறுத்தப்பட்டமையால் | அவற்றை விற்பனை செய்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இயந்திரக் கூடம் அதிக இயலளவுடன் காணப்படுகின்றமையால் குறைவான இயலளவையும் விஞ்சுகின்றமையால் வீதிகளின் பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல்களுக்கான நிதியேற்பாடு குறைவடைந்தமையின் | இயந்திரங்கள் கைத்தவிர்க்கப்பட வேண்டும். பொருத்தமற்ற இயந்திரங்களை கொள்வனவு செய்தவர்களுக்கு எதிராக உழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந்த இயந்திரத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட தார் அரைக்கும் 02 இயந்திரங்கள் மற்றும் அவற்றை உருக்கும் 02 இயந்திரங்கள் உடுக்காவ இயந்திரப்பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டு விளைவற்றவாறு காணப்பட்டது. | அடிப்படையில் காபற் உற்பத்தியை நிறுத்துவதற்கு நேர்ந்துள்ளது. | |
| (ii) | 2011-2015 காலப்பகுதியினுள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வீதிகளுக்கு காபற் இடுவதற்காக தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த 14 இயந்திரங்கள் விளைவற்றவாறு இயந்திரப் பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் காலி தலைமை அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்கு கொண்டுவரப்பட்ட பொருட்கள் மற்றும் 166 உதிரிப்பாகங்கள் 2001 ஆம் ஆண்டு முதல் இயந்திரப் பொறியியல் நிறுவனத்தின் ஊழியர்களின் ஓய்வு அறையில் விளைவற்றவாறு குவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தார் உற்பத்தி இயந்திரத்தை செயற்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட 02 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் 2018 ஜுலை மாதம் முதல் 2020 ஒக்டோபர் 09 கணக்காய்வுத் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 02 இயந்திரங்கள் அல்பிட்டிய மற்றும் அலுத்வெவ பெரமுசு இயந்திர வளாகத்தில் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. ஒரு இயந்திரம் ஏலத்தில் விடப்பட்டுள்ளது. 02 வாகனங்கள் அஸ்போல்ட் உற்பத்திகாக சூடாக்கப்பட்ட தாரினை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய இயந்திரங்கள் அஸ்போல்ட் உற்பத்தி மற்றும் அவற்றை விதிகளில் பதித்தல் தொடர்பிலான இயந்திரங்கள் ஆகும். பொருட்களிடையே பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய உருப்படிகள் தேவைக்கேற்ற வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்தும் எஞ்சியுள்ள பொருட்கள் தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏனைய அலுவலகங்களில் பரீட்சிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் எஞ்சியுள்ள பொருட்களை துரிதமாக வைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் விளைவற்றுக் காணப்படுவதை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ செயற்திறனின்மைகள்<br>------------------------------------ | | |
| (i) | தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் | இது திருத்தப்பட்டுள்ளதுடன் தற்போது பிரதம செயலாளரின் | மாகாண சபைகளில் உள்ள அரச சட்ட வல்லுநர்களை வழக்கு |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பில் தென்மாகாண பிரதம செயலாளரின் அலுவலகத்தின் சட்டப்பிரிவில் உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ளாமையால் 2019 மற்றும் 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் தனிப்பட்ட ரீதியில் வழக்கறிஞர்களுக்கு ரூபா 559,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அலவலகத்தின் சட்ட உத்தியோகத்தரின் ஊடாக சட்ட நடவடிக்கைகளுக்காக ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுவதற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (ii) | அதிகாரசபைக்கு எதிராக அதிகாரசபையின் ஊழியர்களினால் பதவி உயர்வுகள், ஊக்குவிப்பக் கொடுப்பனவுகள், சம்பளப் படியேற்றங்களை பெற்றுக்கொடுக்காமை தொடர்பில் தொடுக்கப்பட்டிருந்த வழங்குகள் தொடர்பில் மீளாய்வாண்டினுள் விசாரிக்கப்பட்டவாறு உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 15 ஆக காணப்பட்டது. | பிரதம செயலாளரின் அலுவலகத்தின் சட்ட உத்தியோகத்தரின் ஊடாக சட்ட நடவடிக்கைகளுக்கான அறிவுரைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளமை தொடர்பில் தாழ்மையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். | அதிகாரசபையின் நிர்வாக நடவடிக்கைகள் நிலவும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |

(ஈ) செயற்பாட்டுத் திறமையீனங்கள்

| | | |
|---|---|---|
| தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வலிகம பிரதேச பொறியியல் அலுவலகத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட வெள்ள நீரினால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த வீதிகளை மீளப் புனரமைத்தலின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது அரம்பிக்கப்பட்டு எனினும் இதுவரையிலும் செயற்றிட்டத்திற்குரிய பணம் கிடைக்காமையால் ரூபா 38,733,887 கூட்டுத்தொகையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட 07 நிர்மாணப் பணிகளின் நிதி செயல் முன்னேற்றம் பூச்சியமாக காணப்பட்டது. | இந்த இரு வீதிகளினுள் பெரும்பாலான கடைகள் உடைக்கப்பட்டு மீள நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும். எனினும் கடை உரிமையாளர்களுடன் ஏற்பட்ட முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கு பாரிய காலமொன்று தேவைப்பட்டது. அவ்வாறே கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையும் இதற்கு தாக்கம் செலுத்தியிருந்தது. | குறித்த வீதிகளை தாமதமின்றி மீளமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்<br>--------------------------------------------------------- | | |
| | தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னால் பிரதி பொது முகாமையாளர் (நிர்வாகம்), நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு நியமித்தல் மற்றும் பிரதி பொது முகாமையாளர் (நிர்வாகம்) பதவிக்கு பதவியுயர்வு வழங்குதல் 2006 ஏப்பிரல் 10 ஆம் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) பதவியொன்று இல்லாதுள்ள போது நிர்வாக உத்தியோகத்தர் பதவியில் சேவையினை நிரந்தரமாக்காது பிரதிப் பொது முகாமையாளர் பதவியில் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் குறித்த பதவிகளுக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் 2018 டிசெம்பர் 17 ஆம் திகதி இடம்பெற்ற தென்மாகாண சபை நிதியம் மற்றும் கணக்குகள் குழுவின் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை ல. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) நியமிக்கப்பட்டு பின்னர் கணக்குகள் குழுவின் கட்டளைகளின் பிரகாரம் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) பதவியிலிருந்து உதவி முகாமையாளர் (நிர்வாகம்) பதவியினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதனை அவர் நிராகரித்து சேவையிலிருந்து விலகியிருந்தார். பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் கட்டுப்பாடு) பதவியொன்று காணப்படுகின்றமையால் பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்) பதவிக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை . பதவியணிக்கு கடமைகளை சாட்டுதல் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. சம்பளமற்ற சேவைக் காலத்திற்குரிய சம்பளப் படியேற்றங்களை செலுத்துதல் விதிகளுக்கு முரணானது எனின் அந்த சம்பளப்படியேற்றங்களை குறைப்பதற்கும் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையொன்று காணப்படும் எனின் அந்தப் பணத்தை மீள அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றேன். | தென்மாகாணசபை நிதியம் மற்றும் கணக்குகள் குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) பதவியணி நிர்வாகம் | | |
| தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட மட்டத்திலான 17 பதவிகளில் 07 பதவிகளின் கடமைகள் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்திகோகத்தர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் அது அதிகாரசபையின் நிர்வாகம் மற்றும் செயற் பெறுபேறு தொடர்பில் பாதகமான முறையில் தாக்கமளித்திருந்தது. | பதிற் கடமை நியமனங்களின் காரணமாக அதிகாரசபையின் நிர்வாகம் மற்றும் செயற் பெறுபேறு தொடர்பில் பாதகமான முறையில் தாக்கமளித்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதும் பதிற்கடமை பதிவிக்காக நிரந்தர உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கு 2021 ஏப்ரல் 28 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்தது என்பதும் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| (எ) ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள் | | |
| தம்பாஹல உடுகம வீதியினை கொங்கிறீட் இடும் கட்டம் II இற்காக ரூபா 2,290,887 ஆன முற்பணம் 2017 டிசம்பர் 26 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டிருக்காததுடன் அதிகாரசபையின் செயலாற்றலல் வினையினை காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ள முற்பணத்தினை பற்றுச்சீட்டுகளில் அறவிடுவதுடன் தொடர்ந்தும் எஞ்சியுள்ள பணத்தை உரிய ஒப்பந்ததாரரினால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீதிகளை புனரமைக்கும் செயற்திட்டத்திற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பற்றுச்சீட்டுக்களிலிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த பணியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறல்லாத போது ஏற்பட்டுள்ள நட்டத்தினை பொறுப்புக்கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டும். |

(ஏ) பெறுகைகள்

----------------------

| | | |
|---|---|---|
| எல்பிட்டிய மாயும்தன்ன விவசாய வலயத்தின் நிலத்தினை தயார்செய்வதற்காக தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் குறித்த பெறுகைகளுக்கு முன்னர் எஸ்கவேட்டர் இயந்திரம் ஒன்று 05 நாட்கள் அந்த வலயத்தினுள் 03 ஏக்கர் பரப்பளவான நிலத்தினை பண்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | சுமார் 300 மீற்றர் பரப்பளவான பிரதேசத்தை சுத்தப்படுத்துவதற்கு சுத்தப்படுத்துதல் தொடர்பில் பிரதேச பொறியியலாளர் அறியாதிருந்ததாக தெரிவித்துள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் நிறுவனம் சார்ந்த விசாரணை ஒன்றினை மேற்கொண்ட போதிலும் அது தொடர்பில் எந்தவொரு தகவலையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதும் தகவல்களை மறைக்கும் தவறொன்று இடம்பெற்றுள்ள அல்பிட்டிய பிரதேச பொறியியலாளருக்கு அதிகாரசபையின் ஒழுக்காற்று செயல்முறைக்கு அமைய தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். | பெறுகை நடவடிக்கைகளை உரிய முறையில் பின்பற்றி பெறுகைகளை மேற்கொள்ள வேண்டும். |

(ஐ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| (i) | 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அரச சேவைகள் அணைக்குழுவின் செயலாளரால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்தமானியின் xvii ஆம் | 2020 பெப்ரவரி 25 ஆம் திகதிய தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளரின் கடிதத்தின் மூலம் 04 ஊழியர்களுக்கு | அந்தத் திருத்தங்களை ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்குவதற்கும் அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கும் | 1589/30 ஆம் இலக்க 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் வெளியிடப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயத்தின் 184 ஆம் பிரிவு | நிர்வாக பதவிகளில் நியமனங்கள் வழங்கப்பட்டு 2020 மார்ச் முதல் ஜூன் வரையிலும் ரூபா 649,760 ஆன சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | அதிவிசேட வர்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | 2016 ஏப்பிரல் 19 ஆம் திகதிய தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக தகைமைகளை பூர்த்தி செய்திராத இரு விண்ணப்பதாரிகளுக்கு தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டு 2019 செப்டெம்பர் 09 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | தனிப்பட்ட கோவைகளை நாளது வரையாக்குதல், நன்னடத்தை காலத்தினை நிறைவு செய்த ஊழியர்களுக்கு பதவியினை நிரந்தரப்படுத்துதல் போன்ற பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள உரிய அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருப்பதற்கான நடைமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. | இடம்பெற்றுள்ள தவறை திருத்துதல் மற்றும் பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.6 தலைப்பு 309 – தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| முகாமைத்துவ செயற்திறனின்மைகள் | | |
| தெற்கு அபிவிருத்தி அமைச்சின் தென்மாகாண காணிகள் ஆணையாளர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 02 கப் வண்டிகளின் உரித்து 2021 பெப்ரவரி 12 அம் திகதி வரையிலும் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதம செயலாளரின் ஊடாக எதிர்காலத்தில் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | 02 கப் வண்டிகளின் உரித்தினை சுவீகரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.7 தலைப்பு 310 – தென் மாகாண கல்வி திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | முகாமைத்துவ செயற்திறனின்மைகள் | | |
| (i) | தென்மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் எதுவித பணியையும் மேற்கொள்ளாது சம்பளத்தை பெற்றவாறு உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 84 ஆகும். | எதுவித பணியையும் மேற்கொள்ளாத நோய் நிலைமையில் உள்ள ஆசிரியர்கள் தொடர்பான தகவல்கள் தென்மாகாண கல்வி அமைச்சின் அசயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது அறியத்தரப்பட்டுள்ளது. | ஆசிரியர்களின் சுகாதார நிலைமைகள் தொடர்பான போதியளவான மருத்துவ அறிக்கைகளை பெற்று உரிய முறையில் அதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | தென்மாகாணத்தின் 05 வலயங்களுக்குரிய 128 பாடசாலைகளின் 205 ஆசிரியர்களுக்கு அவர்களின் நியமன பாடத்திற்கு உரிய கற்பித்தல் நடவடிக்கைகளை ஒப்படைக்காது அலுவலகப் பணிகள், பாடசாலையின் மேற்பார்வை, வாசிகசாலை மற்றும் களஞ்சியப் பணிகள் போன்ற பாடசாலையின் வேறு பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை . | ஆசிரியர்களை பாடசாலைகளின் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். |
| (iii) | அம்பலாங்கொட வலய கல்வி அலுவலகத்தின் குறித்த வலயத்தின் பாடசாலைகள் தொடர்பில் கிடைத்த 08 முறைப்பாடுகளுக்கு உரியதாக குழு நியமிக்கப்பட்டு சுமார் ஒருவருட காலம் கடந்திருந்த போதிலும் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது 02 ஆரம்ப விசாரணை அறிக்கைகள் கிடைத்துள்ளதுடன் ஏனைய அறிக்கைகள் இதுவரையிலும் கிடைக்கவில்லை எனவும் எதிர்காலத்தில் துரிதமாக ஆரம்ப விசாரணை அறிக்கைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | விசாரணைகளை உரிய காலத்தில் மேற்கொண்டு அறிக்கைகளை வழங்காத விசாரணை உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) செயற்பாட்டுத் திறமையீனங்கள்

| | |
|---|---|---|
| அம்பலங்கொட வலயக்கல்வி அலுவலகத்தின் 04 பிரதான செயற்பாட்டு பிரிவுகளின் கீழ் செயற்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 03 பிரிவு கல்வி அலுவலகங்கள் மாத்திரம் செயற்பட்டு இருந்தன. அவ்வாறே வலயக்கல்வி அலுவலகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 06 உதவிப்பணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு உரிய கடமைகள் இல்லாது சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | இது தொடர்பில் 2021.01.21 ஆந்திகதி நடாத்தப்பட்ட மாகாண முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் மாகாண கல்விச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>இடமாற்றங்கள் மற்றும் பதவியுயர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் மிகையொன்று ஏற்படாது. | அங்கீகரிக்கப்பட்டவாறு பிரிவு கல்வி அலுவலகங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்து பாடசாலை கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே மிகை பதவியணியினர் அறுபேரை அதற்காக விடுவிக்க வேண்டும். |

(இ) பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள்

| | | | |
|---|---|---|---|
| (i) | எல்பிட்டிய வலயக்கல்வி அலுவலகத்தின் 05 பிரிவுகளின் பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக் குறைகள் மற்றும் மிகைகளை கருத்திற் கொள்ளம் போது ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்திலான பாடங்களுக்கான 196 ஆசிரியர்களின் பற்றாக்குறையும் 133 மிகையும் நிலவியது. | 196 பற்றாக்குறைகள் 133 மிகை ஆசிரியர்களை தேவைக்கேற்றவாறு பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மிகை ஆசிரியர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மிகையாக உள்ள ஆசிரியர்களை விடுவிப்பதற்கும் பற்றாக்குறையை நிரப்புவதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மாத்தறை வலயத்தில் அதிபர் தரத்திற்கு உரிய 36 மிகைகள் நிலவும் போது 07 பாடசாலைகளின் ஆசிரியர் சேவையின் ஆசிரியர்கள் அதிபர் பதவியில் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். | மாத்தறை கல்வி வலயத்தினுள் அதிபர் தரத்திற்கு உரிய 36 மிகைகள் உள்ள போது 09 பதிற்கடமை அதிபர்களை சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பில் ஆலோசனைகளை கோரி 2021.04.22 ஆம் திகதிய தென்மாகாண கல்விச் செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. | 07 பதிற்கடமை அதிபர்களுக்கு பதிலாக 07 அதிபர் தரத்தில் உள்ளவர்களை நியமித்து தொடரந்தும் மிகையாக உள்ள அதிபர் தரத்தினரை வேறு வலயங்களுக்கு விடுவிக்க வேண்டும். |

(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் xix அத்தியாயத்தின் 5.4 மற்றும் 5.4.1 ஆம் பிரிவுகள் | காலி வலயக்கல்வி பணிப்பாளர் குடியிருக்கும் C.W.W.கன்னங்கர வித்தியாலயத்தின் உத்தியோகபூர்வ இல்லம் 2019 பெப்ரவரி 15 ஆம் திகதி ரூபா 2,692,971 ஆன தொகை செலவிடப்பட்டு முழுமையாக பழுது பார்க்கப்பட்டுள்ள போது தாபன விதிக்கோவையின் xix அத்தியாயத்தின் 5.4 மற்றும் 5.4.1 பிரிவுகளுக்கு இணங்காதவாறு ரூபா 2,000 படியான பொருளாதார வாடகை ஒன்றினை மாத்திரம் அறவிட்டவாறு காணப்படுகின்றது. | தாபன விதிக்கோவையின் xix அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவிற்கு இணங்க செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2016 இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கைளின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். |

**1.5.8 தலைப்பு 311 – மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல் அலுவல்கள், கிராமியக் கைத்தொழில், மின்சக்தி மற்றும் கிராமிய தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| எதிர்பார்த்த பெறுபேறுகளை (Outcome) பெற்றுக்கொள்ளாமை | | |
| அமைச்சின் கீழ் உள்ள ரிதியகம மீன் உற்பத்தி பிரிவினை அபிவிருத்தி செய்வதற்காக பிரதம செயலாளரின் நெகிழ்வு நிதியம் மற்றும் விசேட கிராமங்கள் செயற்றிட்டத்தின் கீழ் ரூபா 5,356,167 ஆன நிதியேற்பாட்டினை அங்கீகரித்து 2020 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 4,344,239 ஆன தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்றிட்டத்தை நிறைவு செய்யாமையின் அடிப்படையில் செயற்றிட்டத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. குறித்த செலவனத்தின் பிரகாரம் நலன்களை பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரிதியகம மீன் குஞ்சுகள் உற்பத்திப் பிரிவின் இரண்டாவது கட்டமாக ரூபா 5,356,167 ஆன தொகை நெகிழ்வு நிதியம் மற்றும் விசேட கிராமங்கள் செயற்றிட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் போது கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து நிதியேற்பாட்டினை பெற்று செயற்றிட்டத்தின் அனைத்து இறுதி நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக்கொள் பொருத்தமான நிலைமைக்கு செயற்றிட்டத்தை உள்ளாக்குவதற்கு உரிய பணிகள் இதுவரையிலும் இடம்பெற்றவாறு உள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | குறித்த பணியை நிறைவு செய்து உத்தேச நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.8.1 தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரீதியகம மீன் உற்பத்தி அலகு, தளுன்ன பண்ணை மற்றும் போகாபலச விற்பனைக்கூடம் ஆகியவற்றின் சட்டபூர்வ உரித்து அதிகாரசபையிடம் இல்லாதிருந்த போதிலும் அதிகாரசபையினால் கடந்த பல வருடங்களில் மற்றும் மீளாய்வாண்டின் போதும் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருமானம் ஈட்டப்பட்டு இருந்தது. அந்த நிலையங்களின் பெறுமதியினை சொத்தொன்றாக இணங்கண்டிருக்கவில்லை. | இந்த நிலையங்களை மதிப்பீடு செய்வதற்கான கோரிக்கையொன்று 2020 ஆம் ஆண்டின் போது மாகாண வருமானத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் இதுவரையிலும் அதற்கான மதிப்பீடொன்று கிடைத்திருக்கவில்லை என்பதுடன் எதிர்வரும் வருடங்களில் மதிப்பீட்டு பெறுமதியினை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | சொத்துக்களின் உரித்தினை சான்றுபடுத்திய பின்னர் நிதிக்கூற்றுக்களில் எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான கட்டடங்களின் பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்த கட்டடங்களுக்குரிய ரூபா 43,721,581 பெறுமதியான கட்டடங்கள் அமைந்துள்ள 05 காணித்துண்டுகளை உரிய முறையில் சுவீகரித்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா 43,721,581 பெறுமதியான கட்டடங்கள் அமைந்துள்ள காணிகளின் அஹுங்கல்ல மற்றும் தெனிபிட்டிய நீங்கலாக ஏனைய நிலையங்கள் அதிகாரசபைக்கு பணிகளை மேற்கொள்வதற்காக கையளிக்கப்பட்ட காணிகள் ஆகும். இந்த காணி மற்றும் கட்டடங்களின் உரித்தினை சுவீகரித்தல் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படம் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | சொத்துக்களை சுவீகரித்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தென்மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, விசேட தேவைப்பாடுகளுடனான கிராமிய நிகழ்ச்சித்திட்டம் 2018 கீழ் தும்பு சார்ந்த பிரஷ்களை உற்பத்தி செய்யும் செயற்றிட்டத்திற்காக ரூபா 3,065,325 செலவிடப்பட்டிருந்தது. செயற்றிட்டத்திற்காக | இந்த இயந்திரங்கள் சமூக அடிப்படையிலான சங்கங்களுக்கு உடன்படிக்கையின் மூலம் வழங்கப்பட்டடுள்ளன. | இயந்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதிகாரசபையினால் 510 மெஷின்கள் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் 1,003,625 பெறுமதியான தும்பு அரைக்கும் 259 மெஷின்கள், ரூபா 219,800 பெறுமதியான தும்பு வெட்டும் 28 இயந்திரங்கள், ரூபா 77,000 பெறுமதியான கம்பி வெட்டும் 28 இயந்திரங்கள் மற்றும் ரூபா 660,000 பெறுமதியான 06 ரிம் மெஷின்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் செயற்றிட்டம் அதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,960,425 ஆன தொகையில் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | | |

### 1.5.9 தலைப்பு 312 – தென் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள் | | |
| தென்மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் அலுவலகத்தின் வீட்டுக்கூலி அறவிடப்படும் போது தாபனவிதிக்கோவையின் XIX அத்தியாயத்தின் 5.4, 5.4.1 ஆம் பிரிவுகள் மற்றும் 04/2016 மற்றும் 2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய பொத நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகை அறவிடப்படவேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமையால் 07 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 228,336 ஆன வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரச வீடுகளில் நிலவிய குறைபாடுகள் மற்றும் குறைந்த அளவிலான வசதிகளின் காரணமாக 10% வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பழுதுபார்க்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளமையால் 2021 ஆம் ஆண்டு முதல் 12.5% படியான வீட்டு வாடகை அறவிட்டவாறு உள்ளமை தொடர்பில் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். |

(ஆ) செயற்திட்ங்களை நடைமுறைப்படுத்தல்

-------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| கக்கெனதொர கோழிப் பண்ணையின் விலங்கு உற்பத்தியுடன் தொடர்புடைய பணிகளுக்காக குழாய் கிணறு ஒன்றினை நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டின் போது மற்றும் 2020 மீளாய்வாண்டின் போது மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக ரூபா 1,207,933 தொகை நீர்வழங்கல் சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்றிட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு உரிய பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | கக்கெனதொர கோழிப் பண்ணையின் கால்நடை உற்பத்தியுடன் தொடர்புடைய பணிகளுக்கும் விவசாய பணிகளுக்கும் தேவையான நீரினை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ளும் தேவைப்பாட்டிற்காக குழாய் கிணறு ஒன்றினை நிர்மாணிக்கும் தேவைப்பாடு காணப்பட்ட விடயம் என்பதால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,207,933 அவ்வப்போது நீர்வழங்கல் சபைக்கு செலுத்தப்பட்டு குழாய் கிணறினை பெற்றுக்கொள்வதற்கு உரிய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டவாறு துரிதமாக குறித்த செயற்றிட்டத்தின் பணிகளை நிறைவு செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) போதியளவு அதிகாரத்தினால் சான்றுபடுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| கக்கெனதொர கோழிப் பண்ணையினை பராமரித்தல் மற்றும் கன்று களஞ்சியத்தினை பராமரித்தல் முற்பணங்கள் பணிகளுக்கு (விடய இலக்கம் 31202) உரிய பெறுவனவுகளில் அதிகாரமளிக்கப்பட்ட எல்லையானது ரூபா 26,300,000 ஆன போதிலும் பெறுவனவுகளில் உள்ள படியான பெறுமதி ரூபா 25,815,698 ஆனமையால் பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 484,302 இனால் அண்மித்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிக் முதல் காலப்பகுதி முதல் நாட்டில் நிலவிய மற்றும் இதுவரையிலும் தீர்க்கப்படாதுள்ள கொரோனா தொற்று நோய் நிலைமை (Covid - 19) காரணமாக எதிர்பார்த்தவாறு பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தமையால் மீளாய்வாண்டின் போதும் எதிர்பார்த்தவாறு ஆகக் குறைந்த பெறுவனவுகளின் எல்லையை அண்மிக்க முடியாதிருந்தமையை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | வணிக முற்பணக் கணக்ககளில் அதிகாரமளிக்கப்பட்ட எல்லைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.10 தலைப்பு 315 – தென் மாகாண விவசாயத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்** | | |
| தெளிச்சவில மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் 2018 நவம்பர் 09 ஆம் திகதி ரூபா 260,000 செலவிடப்பட்டு வெள்ளை தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மின்சாரம் வழங்கப்பட்டிராமையால் கணக்காய்வுத் திகதியான 2020 டிசம்பர் 31 வரையிலும் இயந்திரம் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | கொரோனா தொற்று நோய் நிலைமையின் மத்தியில் மின்சார மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு தாமதமானமையால் மின்சாரத்தினை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது மின்சாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆரம்பிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. | இயந்திரத்தினை உடனடியாக பயன்படுத்தி தேங்காய் எண்ணெய் உற்பத்தி செயற்றிட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.11 தலைப்பு 317 – தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| முகாமைத்துவ திறமையீனங்கள் | | |
| (அ) 1972 இன் 15 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் அதிகாரச்சட்டத்தின் 43(ii) பிரிவின் பிரகாரம் கணக்காய்விற்கு உட்பட்ட அதிகார பிரதேசத்தில் 229 சங்கங்களின் இலாபத்திலிருந்து கூட்டுறவு நிதியத்திற்கு ரூபா 194,382,122 ஆன தொகை அறவிட வேண்டியதாக இருந்த போதிலும் இந்த பணத்தினை அறவிடுவதற்கு மாத்தறை கூட்டுறவு அபிவிருத்தி | அறவிடப்பட வேண்டிய ரூபா 207,350,590 தொகையில் ரூபா 2,762,410 ஆன தொகை 2021 ஆகஸ்ட் 30 ஆம் திகதி அளவில் கிடைத்துள்ளது. | கூட்டுறவு சங்கங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கூட்டுறவு நிதியத்திற்கு அறவிடப்படவேண்டிய பணத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உதவி ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு நீதிமன்றத்தினால் அனுப்பப்பட்ட தண்டப்பணம் குறித்த சங்கங்களுக்கு துரிதமாக அனுப்பப்பட வேண்டிய போதிலும் இனங்காணப்படாத ரூபா 914,468 ஆன தண்டப்பண மீதி ஒன்று 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்டது. | 2021 ஆகஸ்ட் 30 ஆம் திகதியளவில் தொடர்ந்தும் நிலவும் மீதி ரூபா 899,761 ஆகும். | நீதிமன்ற தண்டப்பணத்தை சரியாக இனம் கண்டு உரிய சங்கங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.12 தலைப்பு 318 – விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி, கலாச்சார மற்றும் கலை அலுவலகள், சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள், மகளிர் விவகார மற்றும் மனைப் பொருளாதார மேம்படுத்தல், வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் ஆளணி மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள் | | |
| | அமைச்சின் கீழ் உள்ள ஹிக்கடுவ நாரிகம பல்நோக்கு சேவைக்ள நிலையத்தினை நிர்மாணிக்கும் (கட்டம் II) ஒப்பந்தத்தின் இறுதிப்பட்டியலினை பரீட்சித்த போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள 97 விடயங்களில் மாதிரி பரிசோதனையின் பிரகாரம் 41 விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் உள்ளபடியான பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 5,488,162 ஆன அசாதாரணமான சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் 19 விடயங்களுக்காக ரூபா 4,633,249 ஆன அசாதாரணமான அதிகரிப்பொன்று நிலவியது. | திட்டங்கள் மாற்றமடைந்தமை, ஏனைய பணிகளுக்கு இந்த வேலைத்தளத்தில் இருந்து அகற்றப்பட்ட மண் கொண்டு செல்லப்பட்டமை இருபுறமும் ஆதனங்களை பாதுகாக்கும் வகையில் நிர்மாணத்தினை மேற்கொள்ளல் மற்றும் சேதத்திற்குள்ளான மதிலினை மீள நிர்மாணித்தல் போன்றவற்றால் இந்த அளவிலான வேறுபாடுகள் காணப்பட்டன. | ஒப்பந்தங்களின் போது சரியான மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டும். செதங்களுக்கு ஒப்பந்ததாரரின் காப்புறுதியினூடாக நட்ட ஈட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்க வேண்டும். வெலைத்தளத்தில் இருந்து அகற்றப்படும் மண், பலகைகள் போன்றவை திறந்த ஏலத்தின் ஊடாக விற்பனை செய்யப்பட வேண்டும். |

(ஆ) பெறுகைகள்

---------------------

| | | |
|---|---|---|
| அமைச்சினால் 2019 ஆம் ஆண்டின் போது தென்மாகாண நுண், சிறு, நடுத்தர அளவிலான முயற்சியாளர்களுக்கு 50% நலனாளிகளின் பங்களிப்பின் கீழ் சுயதொழில் உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது VAT இற்காக பதிவு செயழிலந்த வழங்குநருக்கு VAT இற்காக ரூபா 974,460 செலுத்தப்பட்டிருந்தது. | VAT வரி அனுப்பலை சான்றுபடுத்துமாறு குறித்த நிறுவனத்திற்கு மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | VAT செலுத்தும் போது வழங்குநர்கள் VAT இற்காக செயற்பாட்டில் உள்ளனரா என்பதனை தேடிப்பார்த்து செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.5.13 தலைப்பு 319 – சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்**

------------------------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளாமை | | |
| 2018 எடுகோள்களை அடிப்படையாக கொண்ட அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தென்மாகாண சமூகநலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் தரவுக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்திற்காக ரூபா 05 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 2018 டிசம்பர் 31 முதல் 2020 ஆகஸ்ட் வரை ரூபா 619,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் பிரதேச செயலகங்களில் நிலவும் பல்வேறு தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் அல்லாத பிரச்சனைகள் காரணமாக இந்த தரவு கட்டமைப்பின் பணிகள் இடைநிறுத்தப்பட்டமையும் செயற்றிட்டங்களின் நோக்கங்களை அடைவதற்கு முடியாதிருந்தது. | மென்பொருளை நிறுவும் செயற்றிட்டத்திற்காக ஆரம்ப கிரயமாக ரூபா 05 இலட்சம் செலவிடப்பட்டதுடன் எஞ்சிய ரூபா 119,000 தொகையானது 2020 ஆகஸ்ட் மாதம் வரை மாதாந்தம் இணையத் தளத்தினூடாக தரவுகளை சேகரிப்பதற்காக செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பயிற்சி நடவடிக்கைகள் இரு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் ஆரம்ப பயிற்சிகள் 2019 மார்ச் மாதம் மற்றும் முறையான பயிற்சிகள் 2019 ஒக்டோபர் மாதம் காலி மாவட்ட பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு மற்றும் விடயத்திற்கு | செயற்றிட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி உத்தேச நோக்கங்களை அடைந்து கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பிரதேச செயலகங்களில் தற்போது நிலவும் கணனி வசதிகளை மேம்படுத்தி இணையத்தள வசதிகளை அபிவிருத்தி செய்து இந்த செயற்றிட்டத்தின் உத்தேச நோக்கத்தை அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. | |

**1.5.14 தலைப்பு 320 – தென் மாகாண தலைமைச் செயலகம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கணக்காய்வுக்கான சான்றுகளின்மை | | |
| உரிய முறையில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படாதிருந்தமையால் ரூபா 1,135,420,724 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்காய்வின் போது மகிழ்ச்சிகரமாக சான்றுதிப்படுத்த முடியாதிருந்தது. | முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்றினை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் மிகவும் துரிதமாக அந்தப் பணிகளை நிறைவு செய்து பதிவேட்டினை உரிய முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. | உரிய முறையில் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) இனங்காணப்பட்ட நட்டங்கள் | | |
| தென்மாகாண சபையின் அமைச்சு/ திணைக்களம் மற்றும் அலுவலகங்களுக்கு சொந்தமான தீர்க்கப்படாது காணப்படும் 104 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 14,367,682 ஆன வாகன விபத்துக்கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள சேதங்கள், 15 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 1,459,142 ஆன ஆதனங்களின் சேதங்களின் கூட்டுத்தொகை ரூபா 15,826,827 ஆகும். | வாகனங்கள் மற்றும் ஆதனங்களுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பில் பல பணிகள் நிறைவு செய்யப்பட்டள்ளது என்பதும் எஞ்சிய சேதங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அதற்காக சட்ட ஆலோசனை பின்பற்றபட்டுள்ளதாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) பொது வைப்புக் கணக்குகள்

| | | |
|---|---|---|
| 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான பொது வைப்பு மீதிகள் தொடர்பில் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 07 நிறுவனங்களுக்குரிய தீர்க்கப்படாத வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 64,704,758 ஆகும். | பல மீதிகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியவற்றை துரிதமாக தீர்ப்பதற்கு இணங்கியுள்ளது. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |

(ஈ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | | |
|---|---|---|
| மாகாணத்தினுள் சேவையாற்றும் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்படும் 08 மாதங்களின் தபுதாரர், அநாதைகள் நிதியத்தின் பங்களிப்புப் பணம் தாமதித்து அனுப்பப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் அனுப்பப்பட வேண்டிய மீதியாக ரூபா 220,714,592 மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மாகாண நிதியத்தின் நிதி இடர்பாடுகளின் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டது. | குறித்த பங்களிப்புப் பணம் உரிய முறையில் தபுதாரர் மற்றும் விதவைகள் நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(உ) நிலுவை ஊழியர் கடன்கள்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,243,111,752 நடைமுறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த, பணி வெறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து பதவியிறக்கப்பட்ட 918 அரச உத்தியோகத்தர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கு மேலாக அறவிடப்படாதுள்ள ரூபா 42,950,767 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வின் அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | இந்த கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்யும் பணிகள் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாட்டு பணிகளின் பெறுபேறு ரூபா 1,654,409,455 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மீள சீராக்கப்பட்ட பற்றாக்குறை ரூபா 1,279,965,187 ஆகும். மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஏனைய நலன்கள் ஆகிய மீண்டெழும் செலவினம் ரூபா 3,648,719,987 இனால் அதிகரித்தமை மற்றும் வரி வருமானம் ரூபா 3,238,506,505 இனால் மற்றும் வரியில்லாத வருமானம் ரூபா 43,829,379 இனால் குறைவடைந்தமை ஆகிய பிரதான காரணங்களின் அடிப்படையில் கடந்த வருடத்திற்கு ஒப்பாக பற்றாக்குறை தொடர்ந்தும் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 அரச மானியங்கள்

| மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | குறைப்பயன்பாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள் (PSDG) | 905,200,000 | 862,219,835 | 42,980,165 |
| எடுகோள் அடிப்படையிலான மானியங்கள் (CBG) | 605,330,000 | 542,481,741 | 62,848,259 |
| கல்விசார் பிரிவு அபிவிருத்தி திட்டம் (TSEP) | 45,000,000 | 32,553,100 | 12,446,900 |
| இரண்டடாவது சுகாதாரத் துறை அபிவிருத்தித் திட்டம் (HSDP) | 220,642,590 | 219,306,400 | 1,336,190 |

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மேலே விபரிக்கப்பட்டுள்ள மாகாண அபிவிருத்தி பணிகளுக்கான மீளாய்வாண்டிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டின் கருத்திற்கொள்ள கூடிய அளவான சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தகவல் சரியானதாகும். | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடு மாகாண நிதியேற்பாட்டினை மாகாண அபிவிருத்திப் பணிகளுக்காக முழுமையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.1.2 மாகாண அபிவிருத்தி திட்டம்

---

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் நடைமுறை வேலை ஆகியவற்றுக்காக ரூபா 1,587 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 1,127 மும்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மாகாணசபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பணி மும்மொழிவுகளின் செயல் முன்னேற்றம் பின்வருமாறு.

| விபரம் | புதிய பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | நடைமுறை பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணிகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | (ரூபா மில்.) |
| முழுமையாக நிறைவு செய்யப்பட்ட | 709 | 165 | 874 | 1,295 |
| 50 சதவீதத்திற்கு மேலாக நிறைவு செய்யப்பட்ட | 91 | 10 | 101 | 186 |
| 50 சதவீதத்தை விட குறைவாக நிறைவு செய்யப்பட்ட | 140 | 3 | 143 | 104 |
| ஆரம்பிக்கப்படாத | 9 | - | 9 | 2 |
| | 949 | 178 | 1,127 | 1,587 |

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| விசேட பிரிவு அபிவிருத்தி செயற்றிட்டம் (கல்வி) மற்றும் விசேட பிரிவு அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு (சுகாதாரம்) உரியதாக தென்மாகாணசபையினுள் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் தென்மாகாண திட்டங்கள் செயலகத்தினால் கண்காணிக்கப்பட்ட இருக்காததுடன் அந்த நிகழ்ச்சி திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பான தகவல்கள் மேற்படி அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே ஒரு வருடத்தினுள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட உத்தேச பணிகளில் சுமார் 14 சதவீதத்திற்கு அண்மிய மிகவும் குறைந்த மட்டத்திலான செயன் முன்னேற்றம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | உரிய அமைச்சிடம் இருந்து தகவல் கோரப்பட்டுள்ள போதிலும் அவை இதுவரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும் இந்த செயற்றிட்டத்தின் ஆரம்பம் முதல் திட்டமிடல் பிரிவின் கண்காணிப்புப் பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை. | தென்மாகாண திட்டமிடல் செயலகத்தினால் தென்மாகாணத்தினுள் நடைமுறைப் படுத்தப்படும் செயற்றிட்டங்களை கண்காணிக்க வேண்டியதுடன் ஒரு வருடத்தினுள் நிறைவு செய்ய வேண்டிய பணிகள் குறித்த வருடத்தில் நிறைவு செய்யப்பட வேண்டும். |

## 04. பதவியணி நிர்வாகம்

### 4.1 மாகாண சபை நிறுவனங்களின் பதவியணி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மாகாணசபை உத்தியோகத்தர்களின் 3,431 ஆன வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1/2019 மற்றும் 2/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு நேர்ந்துள்ளமையால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதுள்ளது என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>துரிதமாக நிரப்புவதற்குரிய பதவி வெற்றிடங்களுக்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 05. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 25 செலவின தலைப்புகளின் தேறிய நிதியேற்பாடுகளின் கூட்டுத்தொகையான ரூபா 2,700,465,585 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்ததுடன் அந்த பெறுமதி ரூபா 903,837 தொடக்கம் ரூபா 661,905,773 இற்கு இடைப்பட்ட வீச்சில் நிலவியது. | பந்தியை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்வரும் வரவு செலவுத்திட்ட நடைமுறையில் இந்த நிலைமையை கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடு முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். |